வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 22.1.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பெண் குழந்தைகளின் நலனுக்கான பேட்டி பச்சாவோ-பேட்டி படாவோ திட்டம் இன்றுடன் 11 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திருவனந்தபுரத்தில், பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

மகாராஷ்டிரா மற்றும் பீகாரில் ஏற்கனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியை, தமிழகத்தலும் மக்கள் நம்ப மாட்டார்கள் என்று, மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிகளுக்கான கடற்படை தலைவர் ரியர் அட்மிரல் சதீஷ் செனாய் இன்று புதுச்சேரியில் முதலமைச்சர் திரு ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

பேட்டி பச்சாவோ-1 (8)

பெண் குழந்தைகளின் நலனுக்கான பேட்டி பச்சாவோ-பேட்டி படாவோ திட்டம் இன்றுடன் 11 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. பெண் குழந்தைகளை மகாலட்சுமியாகவே மதிக்கும் நாடு இந்தியா என்றும், இந்திய சகோதரிகள் தற்போது ஒவ்வொரு துறையிலும், நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் அதே வேளை, உலக அளவிலும் சாதனைகளை எட்டி வருவது பெருமைக்குரியது என்றும், பிரதமர் திரு

நரேந்திர மோடி இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார். இத்திட்டம் குறித்து ஒரு செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ்)

பேட்டி பச்சாவோ-2 (18)

(வாய்ஸ்)

நாட்டில் ஆண்-பெண் குழந்தைகளுக்கு இடையிலான விகிதம் குறைந்து, பாலின சமநிலை பாதிக்கப்படும் பிரச்சனைக்கு தீர்வு காணும் முயற்சியாக, பிரதமர் திரு நரேந்திரமோடி, கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி, அரியானா மாநிலம் பானிபட்டில், பேட்டி பச்சாவோ – பேட்டி படாவோ திட்டத்தை தொடக்கினார். சமூகத்தில் பெண் குழந்தைகளுக்கு எதிரான பாகுபாட்டை போக்கி, பெண் குழந்தைகளை மதித்துப் போற்றவும், சரியான உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை பெண் குழந்தைகளுக்கு வழங்கும் வகையிலும், மக்களிடையே கலாச்சார மாற்றம் ஒன்றை கொண்டு வருவதில் அரசு ஏஜென்சிகள், சிவில் சமூகத்தினர், மற்றும், ஊடகங்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் இத்திட்டம் பரவலாக ஒருங்கிணைத்துள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் பேட்டி பச்சாவோ – பேட்டி படாவோ திட்டம் கணிசமான வெற்றிகளை எட்டியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளால், முன்பு தொள்ளாயிரத்து 18 ஆக இருந்த, ஆண்-பெண் குழந்தை பிறப்பு விகிதம், தற்போது தொள்ளாயிரத்து 30 ஆக அதிகரித்துள்ளது. பெண் குழந்தைகள் பாதுகாப்பாக பிறப்பதில் இருந்து, கல்வி மூலம் பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிப்பது வரை, பெண் குழந்தைகளின் நல மேம்பாட்டிற்கான தேசிய இயக்கமாக இத்திட்டம் திகழ்வதில் ஐயமில்லை.

மோடி கேர□ா 1 (19)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். திருவனந்தபுரம்-தாம்பரம் அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ், நாகர்கோவில்-மங்களுர் அமிர்தபாரத் எக்ஸ்பிரஸ் உட்பட 3 அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள், மற்றும் ஒரு பயணிகள் ரயிலை பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். சாலையோர வியாபாரிகளுக்கான

ஸ்வாநிதி கடன் அட்டைகளை அவர் வெளியிட்டு, கேரளத்தை சேர்ந்த 1 லட்சம் பேருக்கு ஸ்வாநிதி கடன்களை வழங்குகிறார். மத்திய அறிவியல் – தொழில் ஆராய்ச்சி கழகமும், பல்துறை அறிவியல் தொழில் நுட்பங்களுக்கான தேசிய கழகமும் இணைந்து, திருவனந்தபுரத்தில் புதுமையாக்க மற்றும் தொழில் முனைவுக் கேந்திரம் அமைக்கும் பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். ஆயுர்வேதத்துடன், நவீன உயிரி தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் வகையிலான ஆராய்ச்சிகள் மற்றும் புதுமையாக்கப் பணிகளும், இம் மையத்தில் மேற்கொள்ளப்படும். திருவனந்தபுரம் சித்திரை திருநாள் மருத்துவ கல்லூரியில், அதி நவீன கதிரியக்க அறுவை சிகிச்சை மையம் அமைக்கும் பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். சிக்கலான மூளை அறுவை சிகிச்சைகளையும் எளிய முறையில் துல்லியமாக மேற்கொள்ளும் வசதிகள், இம்மையத்தில் இடம் பெறும்.

*அமித் ஷா* (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று, உத்ராகண்ட் மாநிலம் ஹரித்துவாரில் அகில இந்திய காயத்ரி பரிவார் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, பண்டிட் ஸ்ரீராம் ஷர்மா ஆச்சாரியா நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டார். சப்த ரிஷிகள் தவம் செய்த கும்ப பிராந்தியம், ஹரித்துவார் என்றும், பண்டிட் ஸ்ரீராம் ஷர்மா ஆச்சாரியா, வந்தனீய மாதாஜி ஆகியோர், காயத்ரி ஆற்றலை எழுப்பி சாதனை படைத்த இடம், இதுதான் என்றும் அவர் கூறினார். ஆன்மீகம், கலாச்சாரம் மற்றும் இறை நம்பிக்கையின் சங்கமமாக திகழும் இவ்விழாவில் தாம் கலந்து கொள்வது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார். முன்னதாக, ஹரித்துவாரில், பதஞ்சலி அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை மருத்துவமனையை திரு அமித் ஷா திறந்து வைத்தார். உத்ராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி உள்ளிட்டோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

அனுப்பிரியா (15)

இந்தியாவின் ரசாயன மற்றும் பெட்ரோ-ரசாயனத் துறை, வளர்ச்சியின் புதிய கட்டத்தை எட்டி வருவதாக, இத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார். வரி சீர்திருத்தங்கள், எளிமையான ஒழுங்குமுறை விதிகள், மற்றும் வர்த்தகம் புரிவதை எளிதாக்குவதற்கான அரசின் நடவடிக்கைகளால், இது சாத்தியமாகி இருப்பதாக, அவர் இன்று புதுடெல்லியில், இத்துறைக்கான ஃபிக்கி விருது வழங்கும் விழாவில் பேசுகையில் கூறினார். ரசாயன மற்றும் பெட்ரோ – ரசாயன துறைதான் நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தி சூழலின் முதுகெலும்பாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார். ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், வரி அடுக்குள் இரண்டாக குறைக்கப்பட்டதால், இத்துறையில் பிணக்குகள் குறைந்து, ரசாயன உற்பத்தியாளர்கள் பயன்பெற்றுள்ளதாக அமைச்சர் கூறினார். பல்வேறு நாடுகளுடனான இந்தியாவின் வரி இல்லா வர்த்தக உடன்பாடுகளால், ரசாயன துறையில் உற்பத்தி செலவுகள் குறைந்து, உலக அளவிலான போட்டித் திறன் அதிகரித்து இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு கோயல்-1 (18)

மகாராஷ்டிரா மற்றும் பீகாரில் ஏற்கனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியை, தமிழகத்தலும் மக்கள் நம்ப மாட்டார்கள் என்று, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று சென்னையில் கூட்டணி கட்சி தலைவர்களான திரு ஜி கே வாசன், திரு ஏ சி சண்முகம் ஆகியோரை சந்தித்த அவர் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், மூழ்கும் நிலையில் உள்ள காங்கிரஸ் கட்சியுடன், அதன் தோழமை கட்சிகளும் மூழ்கிப் போகும் என்றார். தமிழகத்தில் பல்வேறு கட்சி தலைவர்கள் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து வருவதால், வளர்ச்சியில் ஆர்வம் உள்ள, திறமையான ஒரு அரசு, வரும் ஏப்ரல் மாதம் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவரும், அஇஅதிமுக பொது செயலருமான திரு எடப்பாடி பழனிச்சாமியை திரு கோயல் சந்தித்தார். திமுக அரசு குறித்து மக்கள் அதிருப்தி அடைந்திருப்தால், அஇஅதிமுக தலைமையிலான கூட்டணி, வரும் ஏப்ரல் மாதம் பதவிக்கு வரும் என்று, அவர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில், சனாதனத்திற்கு எதிராக பேசி வரும் திரு உதயநிதி ஸ்டாலினை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என, அவர் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு கோயல்-2 (8)

நாளை மதுராந்தகத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கும் பொதுக் கூட்டம், தமிழக அரசியல் சூழலில் பெரும் மாற்றங்களை கொண்டு வரும் என்று திரு எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

நேற்று அமமுக தலைவர் திரு டிடிவி தினகரன் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்ததும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு அன்புமணி ராமதாஸ் உள்ளிட்டோர், திரு பியூஷ் கோயலை சந்தித்து, அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர விருப்பம் வெளியிட்டதும் குறிப்பிடத் தக்கது.

புதுச்சேரி சந்திப்பு (7)

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிகளுக்கான கடற்படை தலைவர் ரியர் அட்மிரல் சதீஷ் செனாய் இன்று புதுச்சேரியில் முதலமைச்சர் திரு ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்திய கடற்படையில் அக்னி வீரர்கள் மற்றும் அதிகாரிகளாக சேர, இந்திய இளைஞர்களுக்கு எப்படியெல்லாம் ஊக்கம் அளிக்கப்படுகிறது என்பது குறித்து, முதலமைச்சரிடம் அவர் எடுத்துக் கூறினார். கடற்படை ஆள் சேர்ப்பு அதிகாரியும், மக்கள் தொடர்பு அலுவலருமான திரு செந்தில் உள்ளிட்டோர் இந்த சந்திப்பின் போது உடனிருந்தனர்.

*பிரகதி-1 (8)*

உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில் தடைகளைக் களைந்து பணிகளை துரிதமாக நிறைவேற்றி முடிக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட பிரகதி டிஜிட்டல் வசதி, உயர்நிலை தலையீடு மூலம் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. பிரகதி மறுஆய்வு மூலம் திறம்பட்ட முறையில் திறம்பட்ட முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட முக்கிய திட்டங்களில் ஒன்றான, ஐதராபாத் மெட்ரோ ரயில் திட்டம் குறித்து ஒரு தொகுப்பு……

(வாய்ஸ்)

*பிரகதி-2 (18)*

(வாய்ஸ்)

<u>தகவல் தொழில்நுட்பம், மருந்து உற்பத்தி, மற்றும் சேவைத் துறை நிறுவனங்கள் அதிகம் உள்ள ஐதராபாத் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைத்து, மக்களுக்கான போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட, ஐதராபாத் மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்ட பணிகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி, கடந்த 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் தேதி, பிரகதி வசதி மூலம் மறு ஆய்வு செய்தார். 3 பிரிவுகளான, மொத்தம் சுமார் 69 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணிகள், அரசு-தனியார் ஒத்துழைப்பு திட்டமாக மேற்கொள்ளப்பட்ட நிலையில், நிதித் தடை மற்றும் நிர்வாகத் தடை ஏதும் இன்றி, சுமுகமாகப் பணிகள் நிறைவேற்றப் படுவதை உறுதிப்படுத்த, பிரகதி மறு ஆய்வின் போது பல்வேறு அறிவுறுத்தல்களை பிரதமர் வழங்கினார். மத்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறையும், நகர்புற வளர்ச்சி துறையும், தெலங்கானா மாநில அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட அறிவுறுத்தப்பட்டன. சரியான நேரத்தில் தெளிவான உயர்நிலை தலையீடு கிடைத்ததை தொடர்ந்து, பெரிய அளவிலான இத் திட்டத்தின் அமலாக்கம், முழுமையான ஒருங்கிணைப்பு</u>

மற்றும் கவனக் குவிப்புடன் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. திட்டத்தின் அனைத்து 3 மெட்ரோ ரயில் பாதை பிரிவுகளிலும், கட்டுமான பணிகள்

*பிரகதி-3 (7)*

தடையின்றி ஒருங்கே மேற்கொள்ளப்பட்டு, 3 பிரிவுகளும் அடுத்தடுத்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.

இத்திட்டத்தினால், ஐதராபாத் நகரின் ஹை-டெக் சிட்டி, உப்பல், மற்றும் ராய்துர்க் தொழிலகப் பகுதிகளுக்கும், குடியிருப்பு பகுதிகளுக்கும் இடையே, துரிதமான, வசதி மற்றும் பாதுகாப்புடன் கூடிய மெட்ரோ ரயில் பயணம் சாத்தியமாகி இருப்பதும், உயர் நிலை மறு ஆய்வு மூலமான திட்ட அமலாக்கம் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக இத்திட்டம் திகழ்வதும் குறிப்பிடத் தக்கது.

ஜல்ஜீவன் (13)

ஜல்ஜீவன் இயக்கத்தை மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர் மேலாண்மை இயக்கமாக செயல்படுத்தும் நடவடிக்கைகளின் மற்றொரு பகுதியாக, மத்திய அரசின் மூன்றாவது சுஜல் கிராம் ஸம்வாத் நிகழ்ச்சி மெய்நிகர் முறையில் இன்று நடைபெற்றது. பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து, கிராம பஞ்சாயத்து பிரதிநிதிகள், குடிநீர்-துப்புரவுக் குழு உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் மூத்த அதிகாரிகள் இதில் பங்கேற்றனர். மத்திய அரசின் குடிநீர்-துப்புரவுத் துறைச் செயலர் திரு அசோக் மீனா இந்நிகழ்ச்சியில் பேசுகையில், கிராமங்களில் மக்களுக்கு குடிநீர் வழங்கும் பொறுப்பு, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உரியது என்றும், கிராமப் பஞ்சாயத்துகள், இப்பொறுப்பை முழுமையாக ஏற்க வேண்டும் என்றும் கூறினார். மக்களுக்கான குடிநீர் திட்டங்களை நிறுவி, பராமரிப்பது குறித்து, கிராமங்கள் தோறும் லோக் ஜல் உற்சவங்களை நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வானிலை (11)

நாளை கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில், லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. 24,25,26 ஆகிய தேதிகளில் மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் அதிகபட்சமாக, ஈரோட்டில், 32.6 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகி உள்ளது. சமவெளி பகுதிகளை பொருத்தவரை, தர்மபுரியில் 16 டிகிரி செல்சியஸ், மற்றும், மலைப்பகுதிகளை பொருத்தவரை, கொடைக்கானலில், 3.9 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.